# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

## அறிவிப்பு

**அறிவிப்பு எண் 02/2020** **நாள் 08.01.2020.**

1. உதவி பொறியாளர்/மின்னியல், உதவி பொறியாளர்/இயந்திரவியல் மற்றும் உதவி பொறியாளர்/கட்டடவியல் பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள அனைவரிடமிருந்து கணினி அடிப்படையிலான தேர்விற்கு **24.01.2020** முதல் **24.02.2020** வரை இணையவழி மூலம் மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களும், முன்னாள் இராணுவ வீரர்கள், ஆட்குறைப்பு காரணமாகவும் மற்றும் பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட அரசுத்துறையில் பணியாற்றி வேலை இழந்த பணியாளர்களும், கீழ்வரும் காலிப்பணியிடங்களுக்கு இணையவழி மூலமாக விண்ணப்பிக்கலாம் :–

| வ. எண். | பதவியின் பெயர் | காலி பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர்/மின்னியல் | 400 | ஊதிய கட்டு–1 (அதிகாரிகள்) (Rs.39800 – 126500) |
| 2. | உதவி பொறியாளர்/ இயந்திரவியல் | 125 | |
| 3. | உதவி பொறியாளர்/கட்டடவியல் | 75 | |

**1. முக்கிய தேதிகள்**

| | |
|---|---|
| அறிவிக்கை நாள் | **08.01.2020** |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான ஆரம்ப நாள் | **24.01.2020** |
| விண்ணப்பங்கள் இணையம் மூலமாக சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | **24.02.2020** |
| தேர்வு கட்டணம் வங்கியில் செலுத்துவதற்கான கடைசி நாள் | **27.02.2020** |
| தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | கணினி அடிப்படையிலான தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேர்வு நடத்தும் அமைப்பு ஆகிய தகவல்கள் www.tangedco.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். |

**3. தகுதிகள்**

**(அ) வயது 01.07.2019 அன்று**

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இனவகைகள் | குறைந்தபட்ச வயது முடிவடைந்து இருக்க வேண்டும் | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆ.தி, ஆதி (அ), ப.வ,. மற்றும் ஆதரவற்ற விதவைகள் | 18 வயது | 35 வயது |
| 2. | மி.ப.வ/சீம, பி.வ., பி.வ(மு) | 18 வயது | 32 வயது |
| 3. | ஏனையோர் (அதாவது ஆ.தி, ஆதி(அ), ப.வ., மி.ப.வ/சீம, பி.வ., பி.வ (மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள்) | 18 வயது | 30 வயது |

**மாற்றுத்திறனாளிகள் :** நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்.

முன்னாள் இராணுவத்தினருக்கு

1) ஆதி திராவிடர்/ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர் ஆகிய பிரிவினைச் சார்ந்தவர்களுக்கு 53 வயது வரை சலுகை வழங்கப்படும்.

2) ஆ.தி., ஆ.தி (அ) மற்றும் ப.ப, தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 48 வயது வரை சலுகை வழங்கப்படும்.

3) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/பணி/பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் முன்னாள்

[illegible]
இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

**தொழிற்பழகுனர் பயிற்சி :** தொழிற்பழகுனர் பயிற்சி பயின்ற விண்ணப்பதாரர்களுக்கு பயிற்சி காலத்திற்கு மட்டும் வயது சலுகை வழங்கப்படும்.

(முழு விவரங்கள் www.tangedco.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்)

(ஆ) கல்வித்தகுதி (அறிவிப்பு வெளியான அன்று உள்ளபடி)

நாளிட்ட அறிவிக்கை அன்று விண்ணப்பதாரர்கள் உதவி பொறியாளர்/ மின்னியல், உதவி பொறியாளர்/ இயந்திரவியல் மற்றும் உதவி பொறியாளர்/கட்டடவியல் பதவிக்கு கீழ்கண்டவாறு கல்வித்தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

| வ.எண் | பதவியின் பெயர் | கல்வித்தகுதி |
|---|---|---|
| 01. | உதவி பொறியாளர்/ மின்னியல், இயந்திரவியல் மற்றும் கட்டடவியல் | A Bachelor degree in Engineering (EEE/ECE/EIE/CSE/IT/Mechanical/ Civil) (OR) A pass in AMIE (Sections A and B) under Electrical/ Mechanical/ Civil Engineering Branch. |

(i) 10–ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்பு/டிப்ளமோ தேர்ச்சி பெற்று பின்னர் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுள்ளவர் ஆவார்கள்.

(இ). தேர்வுகட்டணம் : –

| | |
|---|---|
| முற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்). | ரூ.1000/– (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்)* |
| ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர். | ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்)* |
| அனைத்து பிரிவினை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு. | ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்)* |
| * மேலும், ஜி.எஸ்.டி. மற்றும் இதர வங்கி சேவைக் கட்டணங்கள் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும். | |

குறிப்பு:– மேலும் விண்ணப்பிக்கும் முறை மற்றும் தகுதி, தேர்வு தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு www.tangedco.gov.in என்ற இணையத்தை பார்க்கவும்.

தலைமை பொறியாளர்/பணியமைப்பு

செ.ம.தொ.இ/ 65 /வரைகலை/2020